முருகப்பெருமான் துணை

**மகான் திருநாளைபோவார் நாயனார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**28.10.2023**, சனிக்கிழமை

1. அண்ணலே கலியுக ஞானியே
அரங்கனே ஆறுமுகனார் அவதாரமே
மண்ணுலகம் காக்க வேண்டி
மாதருமம் செய்யும் தவசியே
2. தவசியே உன்பெருமை கூறி
தக்கநல் அறிவுரை ஆசி
அவனியில் சோபகிருது துலைதிங்கள்
அய்யமற லாபதிகதி காரிவாரம்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 11ம் நாள், 28.10.2023, சனிக்கிழமை)
3. வாரமதில் திருநாளைபோவார் யானும்
வழங்குவேன் உலகநலம் பெற
சோரம் நீக்கி காத்தருளும்
சுத்தசைவ நெறி காட்டும்
4. காட்டும் ஞானியரின் வழியை
கண்டு கேட்டுப் பணிந்து
வாட்டமற தொடர்ந்து வர
வணங்கிச் சரணாகதி கொண்டு
5. கொண்டுமே முருகா என
குருவரங்கன் திருவடி பற்றி
தொண்டுபுரிய சீடர்களாக
தேசிகனை விட்டகலாத் தொடர
6. தொடரவே தன்னார்வமிக்க
தெய்வபலம் கொண்ட நல்
சீடர்களாக ஆற்றல் கூடி
செப்பிடுவேன் அரங்கன் தேடும்

7. தேடும் ஞானப் படைகளாக
தெய்வ ஞான சமூகம்தனை
தடையற உருவாக்கி இனிதே
தலைவனை நல்லத் தலைமையை

8. தலைமையை உருவாக்கும்
தவசிபலம் கொண்டவர்களாக
ஊழல் லஞ்சம் வஞ்சமில்லா
உண்மை நிறைந்த சபைகளாக

9. சபைகளாக தருமம் காக்கும்
சற்குருமார்களாகத் தேற்றி
அபயமென அரங்கன் நோக்கம்
அகிலமதில் நிறைவேற்றி இனிதே

10. இனிதே ஞான ஆட்சிபடைப்பர்
எங்கும் பாதுகாப்பு நிறைந்த
கனிவேலன் வந்தருளுகின்ற
கண்ணியமிக்க ஞானஉலகம் ஆக்கி

11. ஆக்கியே அரங்கன் சீடர்கள்
அகிலத்தில் மாற்றம் புரிவர்
ஆக்கமுடன் அற்புதம் படைப்பர்
அருளிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—